| வருமானம் ரூ.மில்லியன் | 0.10 | 1.50 | 2.30 | 4.61 | 133.03 | 42.95 | 42.04 | 41.00 |

2010, 2011, 2012, 2013 வருடங்களை நோக்கும்போது காணப்பட்ட கடன் நிலைமைகளில் விரைவான வீழ்ச்சினை காணக்கூடியதாகவுள்ளது.

# கணக்கீட்டுக் கொள்கை 2013

## 01.பொது

### 1.1 இணங்கி ஒழுகும் கூற்று

சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டித் தொகுதி அதிகார சபையின் கணக்கு, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுத் தரத்திற்கு இணங்கி வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

### 1.2 ஒழுங்கமைப்பு அடிப்படை

நிதிக் கூற்று வரலாற்று செலவிட்டின் மீது ஒழுங்கமைக்கப்பட்டதுடன், காணி, கட்டடம் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கான மீள்கணிப்பிட்டிற்கான சீராக்கல் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு பணவீக்க நிலைமை கருத்தில் கொள்ளப்படவில்லை.

### 1.3 நிலுவை பத்திரத்திற்கு பின் நிகழ்வு

நிலுவை பத்திரத்திற்கு பின் நடைபெறுகின்ற அனைத்து போதிய வற்புறுத்தல் காணப்படி அதற்காக நிதி அறிக்கைகளில் தேவையான ஒப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவ சீராக்கல் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 02. சொத்துக்கள் மற்றும் அவற்றை மதிப்பீட்டும் முறை

நிலுவை பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களில் நடைமுறை சொத்துக்களாக இனம்காணப்பட்டது நிதி மற்றும் வங்கி நிலுவை மற்றும் சாதாரண கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளில் ஒரு வருடத்தினுள் பணமாக மாற்றக்கூடியதென கருதும் விடயங்களாகும்.

### 2.1 சொத்துக்கள்

சோத்துக்கள் மற்றும் பொறித்தொகுதி உபகரணங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதியை குறிப்பிடப்பட்டிருப்பது திரண்ட தேய்மானத்தினை குறைத்ததன் பின் உள்ள பெறுமானத்திற்காகும்.

கட்டட சொத்துக்களில் அடங்கிய செலவானது நேரடி தொழிற்படைச் செலவாகும். அவ்வாறே நிலையான சொத்துக்களின் பிரதான உப பிரிவுகளாக வேறுபடுத்திருப்பது அவற்றின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட காலத்தினை கருத்திற் கொண்டாகும்.

### ஆர்.பிரமதாச சர்வதேச கிரிகெட் விளையாட்டரங்கு

ஆர்.பிரமதாச சர்வதேச கிரிகெட் விளையாட்டரங்கு 2006-11-01 ஆம் திகதியிலிருந்து இலங்கை கிரிகெட் நிறுவனத்திடமிருந்து மாதத்திற்கு ரூபா 250,000/- அறவிடும் அடிப்படையில் 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. 2006-12-31 ஆம் திகதி ஆகும்போது இலங்கை கிரிகெட் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்திற்காக சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதி அதிகார சபைக்கு ரூபா 25,023,264/- பணம் அறவிட வேண்டியதாக இருப்பதுடன் அது பற்றிய மற்றும் நடைமுறையில் அறவிடப்படுகின்ற மாதாந்த வாடகை பற்றியும் இரு பிரிவினருக்கிடையே உடன்பாட்டிற்கு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### பெளிஅத்த மற்றும் வீரகெட்டிய நீச்சற் தடாகத் தொகுதி

பெளிஅத்த தொழிநுட்ப கல்லுரியில் மற்றும் வீரகெட்டிய இராஜபக்ஷ மத்திய கல்லுரிக்கு உரித்தான நீச்சற் தடாகம் இரண்டு மற்றும் சுழியோட்டத் தடாகத்தினை 2008 ஆம் ஆண்டியிலிருந்து சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதி அதிகாரி சபையால் பராமரிப்புச் செய்யப்படுகின்றது. அதிகார சபையின் முகாமைத்துவ அனுமதியுடன் ஊழியர்கள் 09 பேர் தற்காலிக அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளனர். அதில் மூவர் ஒப்பந்த அடிப்படையில் ஆகம்.

2008 ஆம் ஆண்டு இந் நிச்சிற் தடாகங்களின் செலவு இல்ல வெளியாட்டரங்கின் செலவாக கணக்கில் இடப்பட்டதுடன் முகாமைத்துவ குழுவின் தீர்மானத்தின்படி 2009 ஆம் ஆண்டியிலிருந்து இந் நீச்சற் தடாகற்களில் செலவு வெவ்வேறாக கணக்கில் இடப்பட்டது.

## 2.2ஏனைய செலவினம்

சொத்துக்கள் மற்றும் பொறித்தொகுதி உபகரணங்களில் உள்ளடக்கப்படும் பாகங்கள் மீண்டும் ஒழுங்கமைப்பதற்காக செலவிடப்படுகின்ற செலவு புறம்பாக கணக்கில் இடப்பட்டதுடன் அவை மூலதனமாக்கப்பட்டு பிரயோசமான ஆயுள் காலத்திற்குள் பதிவில் இடுவதற்காக கணக்கில் இடப்பட்டுள்ளது. ஏனைய செலவுகள் மூலதனமாக்கப்பட்டுள்ளது. அச் செலவினால் சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நன்மைகளின் விருத்தியாகின்ற செலவாவதுடன் ஏனைய அனைத்து செலவுகளும் வருமான கூற்றுக்கு சீராக்கப்பட்டுள்ளது.

## 2.3 தேய்வு

தேய்வு கொள்கையின்படி இலகுவான வழிமுறை கடைபிடிக்கப்படுவதுடன் சொத்துக்களில் தேய்வு இடம்பெறுவது சொத்துக்களை கொள்வனவு செய்த வருடத்தில் அல்லது நிர்மாணத்தினை முழுமையாக செய்த வருடத்தியிலிருந்து ஆகும். தேய்வு எதிர்பார்க்கப்படுகின்ற ஆயள் காலத்தில் வரவு செலவு கணக்கில் எழுதி செலவில் வைக்கப்பட்டுள்ளது. காணிக்கான தேய்வு இடம்பெறவில்லை.

| | |
|---|---|
| கட்டடமும் நிர்மாணமும் | 2.5% |
| அதி சக்தி வாய்ந்த மின் கம்பம் | 10% |
| செயற்கை ஓடுப்பாதை | 20% |
| இயந்திர உபகரணங்கள் | 10% |
| கணனி | 25% |
| மோட்டார் வண்டி | 20% |
| விளையாட்டு உபகரணங்கள் | 10% |
| மரத் தளப்பாடங்கள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| திரைசீலை | 50% |
| அதி சக்தி வாய்ந்த மின் குமிழ் மற்றும் இக்னய்டர் | 50% |

32-5811 ஆம் இலக்க பெஜரோ ஜீப் வண்டி மனித வலு மற்றும் பயன்பாட்டு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் எமது அதிகாரி சபையின் சொத்தாக கருதப்பட முடியாது. அதற்கு உரித்தான பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமான செலவின அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

64-3180 ஆம் இலக்க பஜரோ வண்டி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதால் எமது அதிகார சபையின் சொத்தாக கருத முடியாது. அதற்கு உரித்தான பராமரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகார சபையின் வருமான செலவின அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய வரவு செலவு சுற்றறிக்கை 150 இன் பிரகாரம் பொது திறைசேரியிலிருந்து ரூபா 9,100,000 பெறுமதி வாய்ந்த NB-1527 ஆம் இலக்க புதிய வேண் வண்டி ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அவ் வாகணத்தின் பெறுமதியாக காப்புப் பெறுமதி கணக்கில் இடப்பட்டுள்ளது.

தேசிய வரவு செலவு சுற்றறிக்கை 150 இன் பிரகாரம் பொது திறைசேரியிலிருந்து ரூபா 7,500,000 பெறுமதி வாய்ந்த PD-9713 ஆம் இலக்க புதிய கப் வண்டி ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அவ் வாகணத்தின் பெறுமதியாக காப்புப் பெறுமதி கணக்கில் இடப்பட்டுள்ளது.

## 2.4 வியாபார மற்றும் ஏனைய கடன் பெறல்

வியாபார மற்றும் ஏனைய கடன் பெறல் நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவற்றின் தேறிய கைகூடும் பெறுமதி மீதாகும்.

## 2.5 இருப்பு

இருப்பு நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருப்பது செலவு பற்றியாகும். இருப்பு பெறுமதிகளில் முதற் கிடைப்பணவு முதல் வழங்கல் மீது தீர்மானிக்கப்படுவதுடன் அதன் கீழ் கொள்வனவுச் செலவு மற்றும் இருப்பின் தற்போதைய நிலைமை மற்றும் உரிய இடத்திற்கு கொண்டு செல்லும் வரை செய்யப்படுகின்ற அனைத்து செலவுகளுக்கு உரியதாகும்.

## ஒதுக்கீடும் பொறுப்புக்களும்

நிதி அறிக்கையை தயாரிக்கும்போது அடையாளங்காணப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் கணக்கில் இடப்பட்டுள்ளது. நிதி அறிக்கையில் உள்ள நடமாடும் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருப்பது நிலுவை பத்திர திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் செலுத்தி முடிக்கப்பட்ட அல்லது கேட்கும்போது செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்களாகும். நிலையான பொறுப்புக்கள் என்பது ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்குள் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய பொறுப்புக்களாகும்.

## 3.1 ஊழியர் உரிமை

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செய்யப்பட்ட பங்களிப்பு நிதி கூற்றில் செலவாக அடையாளங்காட்டப்பட்டுள்ளது.

## 3.2 வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவு

வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவு அவற்றின் செலவின் மீதாக நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3.3 ஊழியர் ஓய்வூதிய பணிக்கொடை

பணிக்கொடைக்காக நிதிக் கூற்றில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் முதற் சேவை வருடத்தியிலிருந்து அனைத்து ஊழியர்களும் இவ் ஒதுக்கீட்டுக்காக கணிப்பிடப்பட்டுள்ளனர். இது இலங்கை கணகீட்டுத் தரத்தின் 16 ஆம் இலக்கத்தற்கு உரியதென மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இக் கொடுப்பனவு இடம்பெறுவது 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் பிரகாரம் உரித்து பெற்று தொடர்ந்து 5 வருட சேவை காலத்தினை பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு மட்டுமே ஆகம்.

## 04 வருமானக் கூற்று

### 4.1 வருமானம்

இலங்கை கணக்கீட்டின் தரத்தின்படி உரிய சேவையினை வழங்கியதன் பின் அட்டுருவ அடிப்படையின் மீது வருமானம் அடையாளங்காணப்பட்டுள்ளது.

### **4.2** செலவினம்

வருமான விபரத்தின் இலாபம் அல்லது நட்டங்களை அடையாளங்காணப்பட்டிருப்பது வரிக்கு முன் மற்றும் அனைத்து அடையாளங்காணப்பட்ட பொறுப்புக்களாக ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின் ஆகம்.

தேறிய நிலுவை கணிப்பிடும்போது சொத்துக்களை பராமரிக்கும் மற்றும் வியாபாரத்தினை நடாத்திக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு வருமான விபரத்திற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
நிறுவனத்தினால் வசதிகளை வழங்கும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களிடமிருந்து மின், நீர் பட்டியல்

மற்றும் வாடகை அறவிடப்படுவதோடு செலவு நிரலில் காட்டப்பட்டுள்ளது.

4.3 நிதி செலவினம்

நிதிச் செலவு

நிலையான வைப்புக்களில் வட்டியின் மூலம் வருமானம் அட்டுருவ அடிப்படையில் கணக்கில் இடப்பட்டுள்ளது. வட்டிற்கான செலவு மற்றும் ஏனைய கடன் செலவினங்கள், நிதி செலவு கணக்கிடும்போது சீராக்கப்பட்டுள்ளது.

4.4 கொடுப்பனவு

வழங்கல் மற்றும் உதவி அதற்கு உரித்தான செலவுகளுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. சோத்துக்களுக்குரிய பண ரீதியற்ற வழங்கல் அதன் பணப் பெறுமதி கணக்கில் இடப்பட்டுள்ளதுடன் அச் சொத்துக்கள் பிரயோசமான ஆயுள் காலத்தில் வருமான கூற்றில் வைக்கப்பட்டுள்ளது.

## 05 நிதி ஓட்ட அறிக்கை

1.1 நிதி

நிதி என்பதால் குறிப்பிடப்படுவது கை இருப்புப் பணம் மற்றும் அதி உயர் திரவயத் தன்மையான பணமாக மாற்றக் கூடியதும், அவ்வாறு மாற்றும்போது எவ்வித இடர்அற்ற சொத்தாகும்.

## 06 நிலுவைப் பத்திர தினத்திற்கு பின் நிகழ்வு

நிலுவைப் பத்திர தினத்திற்கு பின் போதிய அனைத்து நிகழ்வினையும் கருத்திற்கொள்ளப்பட்டதுடன் தேவையான சீராக்கல் கணக்கின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

1. வரவு செலவு திட்ட அறிக்கை
2. நிலுவைப் பத்திரம்
3. நிதி ஓட்ட அறிக்கை

2013

நிலுவைப் பத்திரம் - 2013 ஆம் திகதிக்கு நிலுவைப் பத்திரம

| சோத்துக்கள் | 2012.12.31 (ரூபா) | 2012.12.31 (ரூபா) |
|---|---|---|
| நடைமுறை சொத்துக்கள் | | |
| நிதி மற்றும் வங்கி நிலுவை | 14,498,861 | 6,209,385 |
| கடன்பட்டோர் | 40,999,600 | 42,043,413 |
| இருப்பு | 9,926,389 | 9,561,732 |
| பணிக்குழுவிக்கான பத்து மாத கடன் கொடுப்பனவு | 16,105,588 | 15,696,923 |
| முற்பணம் மற்றும் ஏனைய கிடைக்கப்பட வேண்டிய நிலுவை | 53,072,037 | 52,602,448 |
| | 137,602,475 | 126,113,902 |
| நிலையான சொத்துக்கள் | | |
| காணி | 2,856,612,141 | 2856,612,141 |
| கட்டிடம் | 1,128,693,563 | 1,076,753,164 |
| அதி சக்தி வாய்ந்த மின் கம்பம் | 3,443,716 | 4,141,482 |
| அதி சக்தி வாய்ந்த மின் குமிழ் | 995,362 | 1,777,915 |
| இயந்திர உபகரணங்கள் | 134,025,856 | 151,673,802 |
| கணனி | 718,350 | 1,096,026 |
| மோட்டார் வண்டி | 9,792,824 | 14,526,848 |
| விளையாட்டு உபகரணங்கள் | 40,463,816 | 38,048,039 |
| மர தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,066,078 | 773,661 |
| அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள் | 8,604,977 | 7,174,199 |
| திரைச்சீலை | 2 | 2 |
| நடைமுறைபடுத்தும் செயற்பாடுகள் | 223,247,474 | 241,277,409 |
| நிலையான சேமிப்பு | 29,605,530 | 29,529,338 |
| | **4,437,269,689** | **4,423,384,025** |
| மொத்த சொத்துக்கள் | **4,574,872,164** | **4,549,497,926** |
| மூலதன அளவும் பொறுப்புக்களும் - நடமாகும் பொறுப்புக்கள் | | |
| வியாபார கடன்பட்டோர் | 848,197 | 19,940,272 |
| பாதுகாப்பு வைப்பு | 3,754,268 | 3,928,229 |
| பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் | 1,178,550 | 908,284 |
| வுரி ஒதுக்கீடு | 217,102 | 70,164 |
| அட்டுருச் செலவு மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவு | 7,725,797 | 6,444,476 |
| ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | 43,354,895 | 17,163,010 |
| | **57,252,770** | **48,280,473** |

## வரவு செலவு திட்ட அறிக்கை

2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் வருடத்திற்கான வரவு செலவு திட்ட அறிக்கை

| | 2013.12.31 (ரூபா) | 2012.12.31 (ரூபா) |
|---|---|---|
| வருமானம் | **89,031,160** | **77,173,543** |
| | 89,031,160 | 77,173,543 |
| | | |
| பொது திறைசேரி ஒதுக்கீடு | 96,800,000 | 78,400,000 |
| | | |
| | **96,800,000** | **78,400,000** |
| | | |
| மொத்த வருமானம் | **185,831,160** | **155,573,543** |
| | | |
| செலவினம் | | |
| நடைமுறை செலவினம் | | |
| ஊழியர் கொடுப்பனவுச் செலவு | (106,453,606) | (96,274,825) |
| முகாமைத்துவ சபையின் கொடுப்பனவு மற்றும் செலவினம் | (488,500) | (365,200) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | (7,847,352) | (5,262,310) |
| தேய்மானங்கள் | (80,132,397) | (76,442,520) |
| ஏனைய செலவினம் | (63,112,005) | (59,986,812) |
| | **(258,033,860)** | **(238,231,667)** |
| | | |
| நடைமுறை மிகை (நிலுவை) | **(72,202,700)** | **(82,758,124)** |
| மிகை பணக்கொடைக்கான ஒதுக்கீடு | | |
| நிதிச் செலவு | (10,248,227) | (132,086) |
| வரி முன்னைய மிகை (நிலுவை) | **(82,450,927)** | **(82,890,210)** |
| | | |
| கூட்டப்பட்ட நடைமுறையற்ற வருமானம் | - | - |
| நிலையான வைப்பின் மீதான வட்டி வருமானம் | 2,226,688 | 906,139 |
| முன்னைய வரி தேறிய மிகை (நிலுவை) | **(80,224,240)** | **(81,984,071)** |
| | | |
| வருமான வரி | (235,887) | (70,164) |
| வருடத்தின் மிகை (நிலுவை) | **(80,460,127)** | **(82,054,235)** |

# நிதி ஒட்டக் கூற்று

2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிகளில் முடிவடையும் வருடத்திற்கான நிதி ஒட்டக் கூற்று

| | 2013.12.31 (ரூபா) | 2012.12.31(ரூபா) |
|---|---|---|
| நடைமுறைகளியிலிருந்து கிடைக்கப்பட்ட நிதி | **(80,460,127)** | **(84,984,071)** |
| குத்தகைக்கு முன் மேலதிகம் அல்லது தேறிய குறைப்பாடு | | |
| | | |
| திரண்ட நிதியத்திற்கு கடந்த வருடங்களில் செய்யபபட்ட தேய்வினை சீராக்கல் | | |
| தேய்வு ஒதுக்கீடு | 80,132,397 | 76,442,520 |
| கடந்த வருடங்களில் செய்யப்பட்ட தேய்வு சீராக்கல் | - | 22,763,724 |
| மீள் கணிப்பீட்டின் மிகை | - | 4,660,229 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 7,847,352 | 5,262,310 |
| | | |
| (அதிகரிப்பு )/ குறைவடைவு மொத்தம் | (364,656) | 1,402,611 |
| (அதிகரிப்பு )/ கிடைக்க வேண்டிய நிலுவை | 165,559 | (44,278,917) |
| அதிகரிப்பு )/ செலுத்த வேண்டிய நிலுவை | 8,972,296 | 22,797,819 |
| பணிக்கொடை கொடுப்பனவு வழங்கல் | (2,616,663) | (2,198,908) |
| நடைமுறைகளியிலிருந்து கிடைக்கப்பெற்ற தேறிய நிலுவை | **13,676,157** | **(2,198,908)** |
| | | |
| முதலீடுகளியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | | |
| சொத்துக்கள் மற்றும் பொறித்தொகுதி உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | (93,941,869) | (201,084,242) |
| குத்தகை செலுத்துதல் | - | (70,164) |
| நிலையான வைப்புக்கான முதலீடு | (76,192) | (19,970,255) |
| முதலீடுகளியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | **(94,018,062)** | **(221,124,761)** |
| நிதி செயற்பாடுகளியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | | |
| திரண்ட நிதியத்தின் வேறுபாடு | 164,979 | 7,044,105 |
| அரச மூலதன கொடுப்பனவு | 91,466,401 | 156,739,500 |
| நிதி செயற்பாடுகளியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | **91,631,379** | **163,783,605** |
| | | |
| நிதி மற்றும் நிதிக்கு சமனான விடயங்களில் தேறிய | 11,289,475 | (52,473,839) |

# Auditor General's Report 2013

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

மගේ අංකය / எனது இல. / My No. } எல்எஸ்/ஏ/எஸ்என்எஸ்சீஏ/ எப்ஏ/2013

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2015 பெப்ரவரி 25

தலைவர்
சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை

**சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

---

சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 17 ஆம் இலக்க சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2014 நவம்பர் 25 ஆம் திகதி வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்கள் (ஐஎஸ்உஸ்ஏஐ 1000 - 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயாத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கபடுகின்றது.

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது பதினைந்து கட்டுமாணங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 9,841,873 ஆன முற்பணங்கள் மற்றும் முற்பணங்கள் மீது செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி ரூபா 277,242 என்பன முறையற்ற விதத்தில் நடைமுறை வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரசபையின் உள்ளக விளையாட்டரங்கை இலங்கை கூடைப்பந்தாட்டச் சங்கத்திற்கு பிரித்தளிப்பதற்காகப் பெறவேண்டிய ரூபா 1,507,764 கட்டணத்திற்காக பற்றுச்சீட்டு வழங்கப்படாதிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்படவேண்டிய, பெறுமதிசேர் வரித் தொகை ரூபா 44,370,072 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 33,252,709 மீள அறவிடப்பட முடியாது என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக அவசியமான ஒதுக்கங்களோ வெளிப்படுத்தல்களோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய மீதி | 1,124,068 | பட்டியல்களும் மீதி உறுதிப்படுத்தல்களும் |
| (ஆ) செலுத்தப்படாத மீதிகள் | 216,593 | பட்டியல்கள் |
| (இ) முற்பணமாகப் பெற்ற வருமானங்கள் | 139,449 | வருமானங்கள் தொடர்பான விபரங்கள் |
| (ஈ) மீளளிக்கத்தக்க வைப்புகள் | 3,925,338 | காலப் பகுப்பாய்வு |
| (உ) வியாபாரக் கடன்பட்டோர் | 40,999,600 | மீதி உறுதிப்பத்திரங்கள் |
| (ஊ) வியாபாரக் கடன்கொடுத்தோர் | 608,419 | மீதி உறுதிப்பத்திரங்கள் |

### 2.2.4 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காதச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | சட்டம், விதிகள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் xix அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | பட்டியல்படுத்தப்பட்ட விடுதியொன்றில் வசிக்கும் அலுவலர் ஒருவரின் உத்தியோகபூர்வ விடுதி வாடகையாக அவரது சம்பளத்தின் 10 சதவீதம் அறவிடப்படவேண்டுமெனினும், அதிகாரசபையால் எவ்வித அறவீடுகளுமின்றி தலைவரின் உத்தியோகபூர்வ விடுதிப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் இழப்புகளுக்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 754 | நிதியாண்டின் இறுதியில் பொருட்பட்டோலை பதிவேடு சமப்படுத்தப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருப்பினும் அதிகாரசபையால் இவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 755(1) | சகல களஞ்சியக் காப்பாளர்களும், அல்லது சிற்சில பொருட்கள் மற்றும் அரச சொத்துக்களின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் எந்தவொரு உத்தியோகத்தரும் தமது கடமையை கைவிடல், இடமாற்றம் பெற்றுச் செல்லல் அல்லது நீண்ட விடுமுறையொன்றைப் பெற்றுச் செல்ல முன்னர் அவரால் அவரது பின்தொடருபவருக்கு அல்லது அக்கடமையை பொறுப்பளித்த மற்றொரு உத்தியோகத்தருக்கு தமது பொறுப்பின் கீழுள்ள சகல அரச பொருட்களையும் வேறு சொத்துக்களையும் ஒப்படைத்து அவற்றைப் ஒப்படைக்கும் உத்தியோகத்தரிடமிருந்து அப்பொருட்களைப் பெற்றுக்கொண்டதாக இரு பிரதிகளில் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் அவ்வாறு செயற்பட்டிருக்க வில்லை. |

(இ) 2003 யூன் 02 ஆம் திகதியின் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 5.1.2 ஆம் பந்தி | செயற்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடு தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | 5.1.3 மற்றும் 5.2.1 ஆம் பந்திகள் | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடானது வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் |

| | | |
|---|---|---|
| | | தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தலுடன், அப்பாதீடு செயற்பாட்டுத் திட்டத்துடனும் மூலதனச் செலவு மதிப்பீட்டுடனும் அனுப்பிவைக்க வேண்டியிருந்தும், நிறுவகம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பரின் ஐஏஐ/1/2002/02 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணினிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியானதொரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2006 மார்ச் 01 திகதியிட்ட கொள்வனவு வழிகாட்டிக் கைநூலின் 5.1.1 (அ) பிரிவு | போகம்பரை விளையாட்டரங்கு தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,022,849 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு தொடர்பான கேள்விகோரும் பதிவேடான்து அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டிராததுடன் கேள்விப் பிணைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.5 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் பாதுகாப்புவேலி மற்றும் பிரதான வாயில் என்பவற்றைத் திருத்துவதற்காக 2013 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 507,409 பெறுமதியான இரும்பு மற்றும் பிற பொருட்கள் மேற்படி வேலைகளுக்குப் பாவிக்கப்படாமல் திறந்தவெளி விளையாட்டரங்கங்களின் களஞ்சியத்தில் தேக்கிவைக்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் செயற்பாடுகள்

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 71,210,496 ஆன குறையொன்றாக இருந்ததுடன் இதற்கொப்பாக முன்னைய ஆண்டின் குறையானது ரூபா 81,984,071 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டில் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 10,773,575 ஆன அதிகரிப்புக் காணப்பட்டது. இது தொடர்பாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அரச மானியம் ரூபா 18,400,000 ஆல் அதிகரித்தமை முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுகததாச விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்குச் சொந்தமான ஆர். பிரேமதாச விளையாட்டரங்கு இலங்கை கிரிக்கெட் சபைக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து வாடகை உடன்படிக்கையின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அவ்விளையாட்டரங்கின் பொறுப்பிலிருந்த அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 2,149,491 ஆன இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்வு இன்றி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டினுள் அதிகாரசபையால் ரூபா 190,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 4 கைவிரலடையாள இயந்திரங்கள் செயற்படாமையால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(இ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின்படி, பணிக்கொடை கொடுப்பனவு ஊழியர் நீங்கிய ஒரு மாதத்தினுள் கொடுக்கப்படவேண்டியிருந்தும், இதன்படி நடவடிக்கை எடுக்கப்படாமையால் மிகை அறவீடாக ரூபா 46,918 செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஈ) அதிகாரசபைக்குச் சொந்தமான விளையாட்டு ஹோட்டல் 2010 நவம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் 3 வருடங்களுக்கு ரூபா 9,120,000 திகதி அதிகாரசபையின் பணிப்பாளர்சபையினால் மேற்படி வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு விளையாட்டு ஹோட்டல் அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் கீழ் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது விளையாட்டு ஹோட்டலின் தேறிய இலாபத்தை வருடாந்த வாடகை வருமானத்துடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 6,001,547, ரூபா 4,167,772 மற்றும் ரூபா 4,672,424 ஆல் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

8

**4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையால் போகம்பரை விளையாட்டரங்கிற்காக 6 கிலோவோற் ஸ்ரீம் ஜெனரேட்டர்கள் 2 உம், 3 புஷ்கட்டர்களும் ஒரு வெக்குவம் கிளீனரும் முறையே ரூபா 559,776, ரூபா 179,850 மற்றும் ரூபா 91,915 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மூன்று சந்தர்ப்பங்களிலும் குறைந்த கேள்வியைச் சமர்ப்பித்த நிறுவனங்களைத் தெரிவு செய்யாமல், உரிய விதப்புரைகளுக்கேற்ப பொருட்களைச் சமர்ப்பிக்காத நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2013 திசெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் 30 ஆந் திகதி வரை கொழும்பு சுகததாஸ தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையில் நடைபெற்ற 3 ஆவது ஆசிய மகளிருக்கான 16 வயதிற்குட்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகள் தொடர்பாக கொள்வனவுக் குழுவின் தீர்மானப்படி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,625,000 பெறுமதியான கூடைப்பந்து உபகரணங்கள் உரிய வியாபாரப் பெயர்களுக்கு பொருத்தமான உபகரணங்கள் என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், போதுமான காலம் இருந்தபோதும் போட்டி அடிப்படையிலான விலைமனுக்கோரல் இல்லாது அவசரதேவையெனக் கருதி மட்டுப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில், 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூபா 24,919,800 ஆன நிதியானது நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்படாமல் ஏழு நாள் வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**4.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

களஞ்சியத்தில் இருப்புகள் தொடர்பாக 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின்போது ரூபா 573,214 பெறுமதியான பொருட்கள் செயற்பாடற்றிருந்ததுடன் அவற்றில் ரூபா 100,712 கிரயமான பொருட்கள் காலாவதியாகியிருந்தன.மேலும், ரூபா 154,075 பெறுமதியான பொருளிருப்புக்கள் குறைவான பயன்பாட்டில் நிலவின.

**4.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுகததாஸ தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் திறந்தவெளி விளையாட்டரங்கு, உள்ளக விளையாட்டரங்கு மற்றும் விளையாட்டு ஹோட்டல் என்பவற்றைச் சுத்தம் செய்யும் ஒப்பந்த உடன்படிக்கையின்படி உடன்படிக்கையில் குறிப்பிட்ட ஊழியர் எண்ணிக்கையை விட மிகவும் குறைந்தளவான ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தும் போது, கொடுப்பனவு செய்யும் போது மாதாந்த ஒப்பந்தத் தொகையில் கழிக்கப்படவேண்டிய நூற்றுக்கு 5 வீதமான ரூபா 270,892 கழித்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வரிப்பந்தாட்ட மைதானம் மற்றும் கூடைப்பந்து மைதானம் என்பவற்றைத் மீளமைத்தல் - ரூபா 1,935,819**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அதிகாரசபையின் திறந்தவெளி விளையாட்டரங்கில் அமைந்துள்ள வரிப்பந்தாட்ட மைதானம் மற்றும் கூடைப்பந்தாட்ட மைதானம் என்பவற்றைத் மீளமைக்கும் பொருட்டு கிரய மதிப்பீடொன்று தயாரிக்காமல் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,935,819 ஆன கணியச் சிட்டையை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2013 திசெம்பர் 12 ஆந் திகதி வரை வரிப்பந்தாட்ட மைதானம் மற்றும் கூடைப்பந்தாட்ட மைதானம் என்பவற்றை மேம்படுத்தல் ஒப்பந்தத்தின் வேலை நூற்றுக்கு 98 வீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததன் அடிப்படையில் ஒப்பந்தக் காரருக்கு ரூபா 1,726,902 நிலையான தொழில்நுட்பக் குழுவின் அனுமதியின்றி, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் பணிப்பாளரின் (பொறியியல்) பணிப்புரை மற்றும் அனுமதி என்பவற்றின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த உடன்படிக்கையின்படி ஒப்பந்தம் 2013 திசெம்பர் 02 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தும் பூர்த்திசெய்யப்பட்டிருந்த வேலைப் பகுதி குறிப்பிட்ட நியமங்களுக்கமைய நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையின் தலைவரினால் பணிப்பாளருக்கு (பொறியியல்) அனுப்பப்பட்ட 2014 மார்ச் 28 ஆம் திகதியிட்ட 04/03/03(13) 2013

இலக்க கடிதம் மூலமும் ஒப்பந்தத்தின் வேலை முடிவடையாதிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்த வரிப்பந்தாட்ட மைதானம் பயிற்சிக்காக உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திருத்தம் செய்யப்பட்ட குறுகிய காலத்தினுள் II ஆம் கட்டமாக ரூபா 79,211,330 ஆன மதிப்பீட்டில் கூடைப்பந்தாட்ட மைதானத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டப்பட்டதால் முதலாவது கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டச் செலவுகள் செயற்பாடற்ற செலவுகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.6 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

அதிகாரசபையால் 2013 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த 08 மூலதனச் செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 61.3 மில்லியன் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும், 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்திட்டங்களின் நிதிசார் செயற்பாடுகள் நூற்றுக்கு 01 வீதம் தொடக்கம் நூற்றுக்கு 60 வீதம் வரையாக இருந்தன.

### 4.7 ஆளணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பதவியொன்றில் வெற்றிடம் ஏற்படும் சகல சந்தர்ப்பங்களிலும் உரிய வெற்றிடத்தை நிரப்புதல் தொடர்பாக திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், அவ்வாறல்லாமல் அதிகாரசபையில் நிலவிய 08 வெற்றிடங்கள் நிரப்புவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றிருந்தன.

(ஆ) 08 அலுவலக உதவியாளர் பதவிகள் தொடர்பாக உள்ளக ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன், விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்த நான்கு விண்ணப்பதாரிகள், சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலும், ஆட்சேர்க்கப்பட்ட 08 பேரில் 04 பேர் வெளிவாரி விண்ணப்பதாரர்களாவர்.

(இ) பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் விளையாட்டு உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுள் 36 பேர் உரிய கடமைகளுக்குப் புறம்பாக வேறு கடமைகளுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். மேலும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக எழுத்துமூல கடமை ஒப்படைப்பு வழங்கப்பட்டிராமையால் அவர்களது சேவையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சான்றுகள் இருக்கவில்லை.

(ஈ) பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை விஞ்சி வேறு பதவிகளிலிருந்து உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டிருந்த காரணத்தால், 05 பதவிகள் தொடர்பாக, அங்கீகரிக்கப்பட்ட்ட ஆளணிக்கு மேலதிகமாக 24 ஊழியர்கள் பணியாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(உ) களஞ்சியப் பொறுப்பாளர் பதவி சம்பந்தமாக ஆட்சேர்க்கப்பட்டிருந்த விண்ணப்பதாரர் அடிப்படைத் தகைமையைக் கொண்டிராததுடன், அவருக்கு சேவை அனுபவமும் இருக்கவில்லை. மேலும், சம்பந்தப்பட்ட பதவி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏனைய விண்ணப்பப் பத்திரங்களும், நேர்முகப் பரீட்சை அறிக்கைகளும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் இல்லாத உடற்பயிற்சி விரிவுரையாளர் பதவி தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் போகம்பரை உடற்பயிற்சி மத்திய நிலையத்திற்காக 2013 ஆம் ஆண்டுக்கு 3 உடற்பயிற்சி விரிவுரையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களித் தகைமையும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டு தொடர்பான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின்படி, நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்காய்வு விடயங்களுடன் ஒப்பிட்ட போது, திட்டமிட்டிருந்தவாறு கணக்காய்வு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 பெப்ரவரி 02 ஆம் திகதியிட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின்படி, மீளாய்வாண்டுக்கான பாதீடு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள், கட்டுப்பாடுகள் என்பவற்றின் குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்களின் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) மனித வள முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(எ) வருமான நிருவாகம்

ஒப்பம் : டபிள்யூ. பீ. சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி (பதில்)
*NH/*